**S.C.No. 77/2019**

**PW1 – Thiru. Tamizhvanan,**

**27.03.2025**

**(A1, A2 are present)**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**நேரம் 13.15 மணி**

புகாரை யார் எழுதியது என்றால் நடத்துனர் எழுதினார். புகாரில் எந்த தேதியில் புகார்கொடுக்கப்பட்டது என்ற தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எந்த பணிமனையில் பணி செய்தேன் என்றும் வண்டியின் தடம் எண் குறித்த விவரங்கள் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி பேருந்தை எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு செல்கிறது என்பது பற்றிய விவரங்கள் எதுவும் புகாரில் இல்லை என்றால் சரிதான். நான் புகாரின் குறிப்பிட்டுள்ள ரவீந்தரநாத், முருகன் எனக்கு ஏற்கனவே தெரியாது என்றால் சரிதான். அவர்கள் பெயர் போலீசார் கூறி தான் தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் ரவீந்தரநாத் பேருந்திற்கு வழிவிடாமல் முழுக்கை சட்டையின் கைப்பகுதியை மடக்கிக்கொண்டும் பின்னர் சீப்பு எடுத்து முடியை சீவிக் கொண்டிருந்தார் என்ற விவரத்தை புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே பணிமனை அதிகாரிகள் வரவில்லை என்றால் சரிதான். நாங்கள் நேரடியாக காவல் நிலையம் சென்றோம். என்னை அடித்தற்கு நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேனா என்றால் எனக்கு அதிகமாக காயம் ஏதும் ஏற்படவில்லை. சட்டை கிழிந்தது. மேற்படி கிழிந்த சட்டையை போலீசார் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த சட்டையுடன் தான் இருந்தேன். புகார் கொடுத்த பிறகு என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. என்னிடமிருந்து பேருந்தின் லாக் புக் மற்றும் நடத்துனரிடமிருந்து டிரிப் ஷீட் ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நான் சொன்ன

நேரத்தில் பேருந்தை இயக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு இயக்கியிருந்தால் லாக் புக் மற்றும் டிரிப் ஷீட் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நடத்துனர் டிரிப் ஷீட் கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர்கள் என்னிடம் கேட்கவில்லை. எதிரிகளை வழக்கிற்கு பின்பு காவல் நிலையத்தில் பார்த்தபிறகு பின்னர் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**நேரம் 13.25 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**S.C.No. 77/2019**

**PW2 – Thiru. Parthiban**

**27.03.2025**

**(A1, A2 are present)**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**நேரம் 13.25 மணி**

வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதன்பின்னர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அ.சா.1 புகார் கொடுக்கும்போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதினேன். ஓட்டுநர் சொன்ன விவரங்களை நான் எழுதினேன். சம்பவம் நடந்த இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை பயணிகள் பஸ்ஸில் இருந்தார்கள். யார் யாரை அடித்தார்கள் என்று பார்க்கவில்லை என்றால் டிரைவரின் சட்டைபிடித்து அடித்தார்கள். எதிரிகளின் பெயர்கள் இந்த வழக்கிற்கு முன்னதாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் போலீசார் இவர்கள் தானா என்று அடையாளம் கேட்டார்கள். அதன்பின்னர் அவர்கள் பெயரை கூறினார்கள். வழக்கறிஞர் திருமலை அந்த பேருந்தில் பயணம் செய்ததற்கான பயணசீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் வண்டியின் தடம் எண் மற்றும் வண்டியை எங்கிருந்து எங்கு எடுத்து செல்கிறோம் என்ற விவரத்தை கூறிவில்லை என்றால் கூறியுள்ளேன். அன்றைய தினம் நானும், டிரைவரும் வண்டியின் டிரிப் ஷீட் மற்றும் லாக் புக்கை போலீசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் அது நிர்வாகத்திடம் உள்ளது. மேற்படி ஆவணத்தை போலீசார் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்

கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**நேரம் 13.30 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.